



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி வெலிங்டன் ஏரிக்கு தொடர் கன மழையினால் நீர்வரத்து அதிகரித்ததனால் அணையின் நலன் கருதி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தண்ணீரை திறந்து வைத்தார். உடன் நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மங்களூர் ஒன்றியக் கழக செயலாளர்கள் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், பா. செங்குட்டுவன், திட்டக்குடி நகரக் கழகச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு, மங்களூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கே.எம்.டி.சங்கர், கோனூர் பூ.மதியழகன் உள்ளிட்ட ஒன்றிய கழக, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாநகராட்சிகள் – நகராட்சிகளில்

# மாடுகள் - நாய்கள் தொல்லைகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை தேவை!

## சட்டப் பேரவையில் – கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 15-

சட்டப் பேரவையில் கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**க.அன்பழகன்:** கும்பகோணம் மாநகராட்சி உருவானதற்குப்பிறகு அருகாமையில் இருக்கிற தாராசுரம் பேரூராட்சியை இணைத்திருக்கிறோம். அந்த தாரசுரத்திற்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு அமைச்சருடைய அறிவிப்பின்படி 39 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே 10 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தொடங்கும் நிலையில் இருக்கிறது. மீதமுள்ள 29 கோடி ரூபாய்க்கும் நிதியாணை வழங்கி, நிதி அளித்திருப்பதால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க



வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக 1,780 கோடி ரூபாய்க்கு நாகப்பட்டினத்திற்குச் சென்றிருக்கிற அந்த வகையில் கும்பகோணம் பகுதியில் இருக்கிற தேனாம்படுகை, பட்டீஸ்வரம், சுந்தரபெருமாள் கோயில், உடையாளூர் போன்ற இந்தப் பகுதி சாலைகளெல்லாம் பைப்புகள் போடப்பட்டதற்குப் பிறகு பழுதடைந்திருக்கிறது. அது சேறும் சகதியுமாக இருக்கிறது. அதை அமைச்சருடைய கவனத்திற்குச் சொல்லி அதை விரைவாக சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து உறுப்பினர்களுக்காகவும் இருக்கிற ஒரேயொரு கேள்வி. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மிகப் பெரிய பிரச்சினை மாடுகள் தொல்லை, நாய்கள் தொல்லை எல்லா நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் இருக்கின்றன. பல நேரங்களில் மாடுகளால் 2 சக்கர வாகனங்களில் சென்று பலர் மண்டை உடைகிறார்கள். கை, கால் உடைகிறது. சிலர் மரணம்கூட அடைகிறார்கள். இந்த மரணத்தைத் தவிர்ப்பதற்கு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என்.நேரு:** உறுப்பினர் அவர்கள் சொன்னது, நேற்றுகூட நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே 3 இடங்களிலே நாய்க்கு கருத்தடை செய்கிற அந்த அலுவலக இடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் இதைச் செய்கிறோம். பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அதை எடுத்து முற்றிலுமாக ஒழிப்பதற்கு வழியில்லை. மாடுகளைப் பொறுத்தளவில் பட்டியிலே அடைத்து அதற்கு அபராதம் விதிக்கிற போது பொதுமக்கள் வந்து எங்கள் மாட்டை ஏன் நீங்கள் பிடித்தீர்களென்று மிகவும் கோபப்படுகிறார்கள். சென்னையிலே 10, 15 முறை பிடித்துவிட்டோம். ஆனால், மறுபடியும் திரும்பவும் மாடுகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, தொடர்ந்து மாநகராட்சி ஊழியர்கள் அந்தப் பணியை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, நாய்கள் தொந்தரவு என்பது எல்லா இடங்களிலும் மிக அதிகமாக இருக்கிறது. துறையினுடைய அனைத்து ஆணையர் பெருமக்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில் கொண்டு விரைவாக அதையெல்லாம் பட்டியில் அடைத்தால் நீங்கள், சட்டமன்ற உறுப்பினர் நாளைக்கு வந்து இதை விடுங்கள் என்று சொல்லாமல் இருந்தீர்களென்றால், உடனடியாக அதை நாங்கள் பிடித்துவிடுவோம். மாட்டைப் பிடித்து பட்டியில் அடைத்தால் நீங்கள் உடனே வந்து விடுங்கள் என்று சொன்னால் அது எப்படி சரியாக இருக்கும் என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ. திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் கழக தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், கழக நிர்வாகிகள் மூவேந்திரன், எ.கே.ஆறுமுகம், மதி வெங்கடேஷ், சுதன், சரவணன், புதூர் வேலு மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவாரூர் கு. தென்னன்

### டிசம்பர் 15 (2011)



**தலைவர் கலைஞர் அவர்களின் இளமைக் காலந்தொட்டு உற்ற நண்பராகத் திகழ்ந்தவரும் – கழகம் தொடங்கிய காலம்முதல் உறுப்பினராக விளங்கியவரும் – திருவாரூர் நகர்மன்றத் தலைவர் – நகரக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் 2000ஆம் ஆண்டு 'பெரியார் விருதினை' தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**"எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும் 'நண்பன்' என்ற தகுதியிலே முதலிடத்தில் வைத்துக் கருதப்படும் திருவாரூர் தென்னனை இழந்துவிட்டேன்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழுக்குத் தொண்டு செய்த தகைசால் தமிழ்ச் சான்றோர்களை

# திராவிட மாடல் ஆட்சி இன்றும், என்றும் பாராட்டும்!



திராவிட மாடல் ஆட்சி என்பது மத, இன, மொழி சாதிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட அனைத்து மக்களுக்குமான ஆட்சி என்பதை தமிழக முதலவர் கடந்த 9, 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார். கடந்த பத்தாம் தேதி நடைபெற்ற சட்டப் பேரவை நடவடிக்கையில் பேரவை உறுப்பினர் கே.பி. முனுசாமி அவர்கள் தமிழ் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பிறந்தநாளை "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி" நாளாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை குறித்து, துறை சார்ந்த அமைச்சர் பதிலளித்தமைக்குப் பின்னர், இந்த கோரிக்கையின் முக்கியத்துவம் கருதி முதல்வர் அவர்கள் துறை அமைச்சரின் பதிலைத் தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி. முனுசாமி அவர்களின் கோரிக்கையின் நியாயத்தையும், அவசியத்தையும் உணர்ந்த முதல்வர் அவர்கள் ஆண்டுதோறும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பிறந்தநாளை "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி" நாளாகக் கொண்டாடப்படுமென சட்டப்பேரவையிலேயே அறிவித்துள்ளார்கள் என்ற செய்தி உலக நாடுகளில் பரவி வாழும் அனைத்து தமிழர்களுக்கும் மகிழ்ச்சிகரமான செய்தி என்பதில் மாறுபட்ட கருத்துகள் இருக்கவியலாது. முதலமைச்சர் அவர்கள் உறுப்பினர் கே.பி. முனுசாமியின் கோரிக்கையை ஆய்வு செய்து முடி வெடுக்கிறோம் என்று கூட பதிலளித்திருக்கலாம். ஆனால், தமிழ் இலக்கியப் பரப்பில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பங்களிப்பு என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் பாராட்டத்தக்கது மட்டுமல்லாமல் பல்வேறு இலக்கிய ஏடுகளைப் பழுது நீக்கி அச்சிட்டவரும் அவர்தான் என்ற பெருமைமிக்க வரலாறு அவருக்கு உண்டு. அவரே தீட்டிய "என் வரலாறு" என்ற புத்தகத்தில் பரவியும், சிதைந்தும் கிடந்த இலக்கிய ஏடுகளை ஒன்று சேர்த்துப் பதிப்பிப்பதற்காக எடுத்துக்கொண்ட தொடர் முயற்சியும், மேற்கொண்ட பயணங்களும் படிப்போர் உள்ளங்களை நெகிழச் செய்யும். அவருடைய கடினமான முயற்சி யும், கரடுமுரடான வழித் தேடல்பயணங்களையும் தொடர்ந்து மேற்கொள்ளவில்லையென்றால் பல இலக்கியப் பொன்னேடுகள் அழிந்தே போயிருக்கும்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



19.02.1885 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள சூரியமூலை என்ற ஊரில் பிறந்தவர். தந்தை வேங்கட சுப்பையர், தாயார் சரஸ்வதி அம்மாள், மனைவி மதுராம்பிகை அம்மையார், தன்னுடைய வாழ்நாள் முழுமையும் பண்டைய தமிழ் நூல்களான சீவகசிந்தாமணி, ஐங்குறுநூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை, பரிபாடல், பதிற்றுப்பத்து ஆகிய பல நூல்களைச் சரிபார்த்துப் பதிப்புச் செய்து வெளியிட்டார். நான்காம் தமிழ்ச்சங்கத்தை மதுரை மூதூரில் நிறுவிய பாண்டித்துரைதேவர் ராமநாதபுரம் சேதுபதிமன்னர் ஆகிய பெருந்தகையாளர்கள் அனைவரும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரின் இந்தப் பெரும் முயற்சிகளுக்கெல்லாம் பெரிதும் துணையாகவும், தூண்டுகோலாகவுமிருந்து உதவினார்கள் என்ற செய்திகளையெல்லாம், வரலாற்றுப் பதிவுகளாக இன்றும் பார்க்க முடியும்.

இத்தகைய பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களது பிறந்தநாளை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என தமிழ்நாடு அரசின் சார்பாக அறிவித்திருப்பது திராவிட மாடல் ஆட்சியின் புகழ்மகுடத்தில் மேலும் புகழ்சேர்ப்பதாகும். தமிழ்நாடு முதல்வரின் இந்த அறிவிப்பினை யொட்டி திராவிட மாடல் ஆட்சியின் சமூக பொருளாதார சமத்துவக் கோட்பாட்டின் தொடர்புடைய சில நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவது அவசியமெனக் கருதுகிறேன்.

இன்றைய சமூக கட்டமைப்பில் அடித்தளத்தில் இருக்கிற "இருளர்" முதலான பழங்குடி மக்கள் தொடங்கி, உயர் வகுப்பாகக் கருதப்படுகின்ற பார்ப்பணர்கள் வரை, திராவிட மாடல் ஆட்சியின் நடைமுறைகளும், சட்டங்களும், திட்டங்களும் முறைப்படியான பயனையும், பாதுகாப்பையும் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை யாரால் மறுக்கவியலும்? மேலும், சமூக சமத்துவத்தையும், பொருளாதார சமத்துவத்தையும் உருவாக்கி உறுதியுடன் கட்டமைப்பதற்காகத்தான், ஒதுக்கீடுகளும், சலுகைகளும் வழங்கப்படுகிறதே அல்லாமல் வேறு பலன் கருதியோ அல்லது பாகுபாடு கருதியோ அல்ல என்பதை அரசியல் தெளிவில்லாதவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சமூக அரசியல் பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவதற்கான அடிப்படை முன்னெடுப்பு கள்தான் அரசின் சார்பாக வழங்கப்படும் ஒதுக்கீடுகளும், சலுகைகளுமாகும்.

இன்றுள்ள சமூக அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வு உள்ளதாகவே இருந்து வருகிறது. இந்திய அரசியல் சட்டப்படி (Constitution of India) மாநில அரசுகளுக்கும், ஒன்றிய அரசுக்கும், அரசியல் அதிகாரங்கள் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர்த்து ஒப்புமை அதிகாரப் பட்டியல் (Concurrent list) ஒன்றும் உள்ளது. இந்த அதிகாரபட்டியல்படி, சமூக அரசியல் பொருளாதார சமத்துவம் கட்டமைக்கப்பட வேண்டுமாயின் மாநிலங்களும், ஒன்றியமும் தங்களுக்கு உள்ள அதிகாரங்களை இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களை நிறைவு செய்யக்கூடிய முறையில் பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்தினால் தான் சமூக அரசியல் பொருளாதார சமத்துவ இலக்கினை அடைய முடியும்.

ஆனால், இன்றுள்ள நிலைமை என்ன? ஒன்றியத்தில் ஆட்சி அமைத்திருக்கும் பி.ஜே.பி. அரசு சமூக பொருளாதார சமத்துவத்தில் நம்பிக்கையில்லாத அரசாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையில் (Preamble of the Constitution) குறிப்பிட்டுள்ள மதச்சார்பற்ற சொற்றொடரும்(Secular), பொருளாதாரச் சமத்துவத்தைக் குறிக்கும் "சமத்துவம்"(Socialist) என்ற சொற்றொடரும் குடியரசுத் தலைவர் இந்த ஆண்டு நவம்பர் திங்கள் 26ம் நாள் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் அதுவும் "இந்திய அரசியல் சட்ட நாள்" நிகழ்வில் முன்கூட்டித் திட்டமிட்டே தவிர்க்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் உரை என்பது ஒன்றிய அரசின் கருத்துக்களையும், சிந்தனைகளையும் பிரதிபலிக்கும் உரைதான். எனவே, ஒன்றிய அரசிற்கே மதச்சார்பற்ற கோட்பாட்டிலும், பொருளாதார சமத்துவக் கோட்பாட்டிலும் நம்பிக்கை யில்லை என்பது தெளிவாகிறது.

அதுமட்டுமல்ல; ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நோக்கமும் திட்டமும் இந்தியாவில் இந்துத்துவாக் கோட்பாட்டின் அடிப்படையிலான இந்து ராஷ்டிரத்தை உருவாக்குவதுதான் என்பதோடு, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற முறைக்கு வழிவகுக்கும் சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான தீவிர முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஈடுபட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த செய்திதான். மத அடிப்படையிலான ஆட்சி, அதிகாரங்கள், எப்படிப் பயன்படுத்தப்படும் என்பதற்கான விளக்கம் தேவையில்லை. மத அடிப்படையிலான ஆட்சிமுறை பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு எப்படிப் பொருத்தமாக அமையும்?

அதுமட்டுமல்ல மத அடிப்படையிலான ஆட்சிமுறையில் பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தில் சமூக பொருளாதார அரசியல் ஏற்றத்தாழ்வுகளை நிச்சயம் உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. பன்முகத்தன்மை கொண்ட இந்திய ஒன்றியத்தில் மத அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் உருவாகுமானால், இந்திய நாட்டின் ஒற்றுமை என்பது கேள்விக்குறியாகிவிடாதா என்பதையெல்லாம் ஒன்றிய பி.ஜே.பி. அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில்தான் தமிழ்நாட்டில் முதல்வர் "திராவிட மாடல்" ஆட்சியின் மூலம், சமத்துவ சமுதாயம், பொருளாதார சமத்துவம், எல்லோருக்கும் எல்லாம், பெண்ணுரிமை என்கின்ற அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கி, ஜனநாயக மாண்புகளும், மரபுகளும் குன்றாமல் அமல்படுத்துகிறார்.

தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற திராவிட மாடல் ஆட்சி அகில இந்திய அளவில் சமூக பொருளாதார அரசியல் துறைகளுக்கு வழிகாட்டும் முன்மாதிரி அரசாகவும், அனைத்து மக்களுக்கும், நம்பிக்கையூட்டும் நல்லாட்சியாகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கான உரிய எடுத்துக்காட்டாக அமைந்த நிகழ்வுதான் தமிழ் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய பிறந்த நாளை, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பாகும்!

தமிழுக்கு பெருமை சேர்த்த தகைசால் சான்றோர்களை திராவிட மாடல் ஆட்சி என்றும் வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டும் என்பதன் வெளிப்பாடுதான் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கான இந்த நிரந்தர ஏற்பாடாகும்!